## வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி
## அசல் வழக்கு எண்.65/2018
## வாதிகள் தரப்பு சாட்சி:1

| | |
|---|---|
| பெயர்: (வா.சா.1) பரமசிவம் | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் நாள் செவ்வாய்கிழமை வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் திரு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா.1 – குறுக்கு விசாரணை (1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பு):–**

வழக்கு சம்மந்தமான விவரங்களை எனது வழக்கறிஞருக்கு நான்தான் தெரிவித்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தானது எனக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டது என எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தானது எந்த வகையில் எனக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டது என்று வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அரசு அலுவலரான 2ம் பிரதிவாதியின் உத்தரவின் பேரில் அவரது அலுவலகத்தைச் சேர்ந்த கீழ்நிலை அலுவலர்கள் கடந்த 01.08.2018ம் தேதி என்னிடம் நேரில் வந்து தாவா சொத்தான புஞ்சை கொளாநல்லி கிராம ரீ.சர்வே எண்.101/5 மற்றும் 101/6ல் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்து சம்மந்தமான வருவாய்துறை ஆவணங்களான பட்டா, அ பதிவேடு ஆகியவற்றில் இருந்து எனது பெயரை 2ம் பிரதிவாதி நீக்க போவதாக தெரிவித்தனர் என வழக்குரையில் சொல்லியுள்ள கீழ்நிலை அலுவலர்கள் யார் என்றால் கிராம உதவியாளர் வாய்மொழியாக தெரிவித்தார். அந்த கிராம உதவியாளரின் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. அவரை அடையாளம் தெரியும். தாவா சொத்து சர்வே எண்.101/5 மற்றும் 101/6 சம்மந்தமான வருவாய்துறை ஆவணங்களில் இருந்து எனது பெயரை நீக்கப் போவதாக கிராம உதவியாளர் நேரில் தெரிவித்ததை அடுத்து நான் எந்த தேதியில் 2ம் பிரதிவாதியான கொடுமுடி வட்டாட்சியரை நேரில் அணுகி விவரம் கேட்டேன் என்று எனது வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.20 09:23:28 +0530

சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் இருந்தோ அல்லது அவரது உத்தரவின்பேரிலோ எந்த ஒரு அரசு அலுவலரும் தாவா சொத்து சர்வே எண்.101/5 மற்றும் 101/6 சம்மந்தமான வருவாய்துறை ஆவணங்களில் இருந்து எனது பெயரை நீக்கப் போவதாக நேரில் தெரிவிக்கவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2)** 2ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் இருந்தோ அல்லது அவரது உத்தரவின்பேரிலோ எந்த ஒரு அரசு அலுவலரும் தாவா சொத்து சர்வே எண்.101/5 மற்றும் 101/6 சம்மந்தமான வருவாய்துறை ஆவணங்களில் இருந்து எனது பெயரை நீக்கப் போவதாக தெரிவித்து எந்தவிதமான எழுத்துபூர்வமான அறிவிப்பும் எனக்கு சார்வு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதியை நேரில் அணுகி தாவா சொத்து சர்வே எண்.101/5 மற்றும் 101/6 தனக்கு உரிமை இருப்பதாகவும், அது தொடர்பான ஆவணங்கள் தன்வசம் இருப்பதாகவும் அவற்றை நான் காட்டத் தயாராக இருப்பதாகவும் எழுத்துபூர்வ அறிவிப்பு தந்தால் உரிய பதில் அளிக்க தயாராக இருப்பதாக கூறியதாகவும் ஆனால் 2ம் பிரதிவாதி நான் கூறியதை ஏற்கவில்லை என்று வழக்குரையிலும் அல்லது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

**3)** 2ம் பிரதிவாதி தாவா சொத்தான சர்வே எண்.101/5 மற்றும் 101/6 சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்களில் இருந்து எனது பெயரை ஓரிரு நாட்களில் நீக்கப் போவதாக கூறினார் என வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. நாளது தேதிவரை தாவா சொத்து சர்வே எண்.101/5 மற்றும் 101/6 வருவாய் துறை ஆவணங்களில் எனது பெயர் உள்ளது என்றால் சரிதான். நான் எந்த தேதியில் 2ம் பிரதிவாதி தாசில்தாரை அணுகி விளக்கம் கேட்டேன் என்றும், எந்த அலுவலர் வருவாய் துறை ஆவணங்களில் இருந்து எனது பெயரை நீக்குவதாக தெரிவித்தார் என குறிப்பிட்டு கூறாததால் இவ்வழக்கிற்கு உரிய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல.

**4)** தாவா சொத்தானது தங்களுக்கு பாத்தியப்பட்டது என 3ம் பிரதிவாதி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.20 09:23:33 +0530

பழனிச்சாமி, 4ம் பிரதிவாதி மணி ஆகியோர்கள் உரிமைகோரி இவ்வழக்கில் தரப்பினராக இணைந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிரிடை கோரிக்கையும் வைத்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 3, 4ம் பிரதிவாதிகள் நானும், எனது குடும்ப உறுப்பினர்களும் 07.10.2009ம் தேதியிட்டு ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரமானது செல்லாது மற்றும் இல்லா நிலையது என விளம்பக்கோரி எதிரிடை கோரிக்கை கேட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 3, 4ம் பிரதிவாதிகள் தாவா சொத்து 101/5 மற்றும் 101/6 வருவாய்துறை ஆவணங்களில் இருந்து எனது பெயரை நீக்கம் செய்யக் கோரி 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

**5)** தாவா சொத்து சர்வே எண்.101/5 மற்றும் 101/6 யாருக்கு பாத்தியப்பட்டது என்று இந்நீதிமன்றம் நீதிமுறையில் தீர்மானித்து வழங்கும் தீர்ப்புரையின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு எனக்கு ஆட்சேபணை ஏதேனும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்.101/5 மற்றும் 101/6 வருவாய்துறை ஆவணங்களில் நாளது தேதிவரை எனது பெயர் இருந்து வருவதால் உரிய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யதக்கதல்ல என்றால் சரியல்ல.

**3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.20 09:23:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.